# வெற்றிலைக்கேணியில் புலிகள் இராணுவம் சமர்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 15 இதழ் 139
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29 — 06 — 1992

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையில் நேற்றுக் காலை வெற்றிலைக்கேணிப் பகுதியில் உக்கிர சமர் ஆரம்பமானது.
கடற்படை, விமானப்படை உதவியுடன் கனரக வாகனங் ...(4ம் பக்கம் பார்க்க)

## இது இறுதிப் போர் அல்ல!

**- சிசில் வைத்தியரத்ன**

(கொழும்பு)
யாழ். குடாநாட்டில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை புலிகளுக்கு எதிரான இறுதிப் போரல்ல, ஓர் விஸ்தரிப்பு நடவடிக்கையே என இராணுவ (4-ம் பக்கம் பார்க்க)

## பச்சிலைப்பள்ளிப் பகுதியில் கடும் விமானத் தாக்குதல்

(பளை)
பச்சிலைப்பள்ளி பகுதியில் நேற்றுக் காலை முதல் இடைவிடாத விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மக் (4ம் பக்கம் பார்க்க)

★ வவுனியா சூடுவெந்தபுலவில்

# 15 இராணுவ காவலரண்களை புலிகள் தாக்கி முற்றாக அழிப்பு!

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(வவுனியா)
**வவுனியா சூடுவெந்தபுலவில் அமைந்துள்ள தொடர் இராணுவ காவலரண்கள் மீது, விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 15 காவலரண்கள் நிர்மூலமாக்கப்பட்டன. இதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவு நவீனரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

நேற்றுமுன்தினமிரவு சுமார் 11-30 மணியளவில் சூடுவெந்தபுலவில் அமைந்துள்ள தொடர் இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துணிகரத் திடீர்த்தாக்குதலில் 15 காவலரண்கள் புலிகளால் [4ம் பக்கம் பார்க்க]

## விறகுடன் வந்தவர் உடல் சிதறிப் பலி

[யாழ்ப்பாணம்]
இயக்கச்சியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த [illegible]ன்னியன் சின்னராசா (38 வயது) என்பவர் உடல் சிதறிப் பலி [4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின்கண்ணிகள்குறித்து படையினர் மத்தியில் கிலி!

(கொழும்பு)
யாழ். குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கைக்குப் படைகள் தயாராகிவருகின்ற போதிலும் இராணுவமுகாம் சுற்றுடலிலும் பாதுகாப்பு அரண்களுக்கு அருகிலும் புலி (4ம் பக்கம் பார்க்க)

## அரசு அறிவிப்புக்கு தமிழ் கட்சிகள் புகார்

(கொழும்பு]
வடபகுதி மக்களை பாதுகாப்பான பகுதிகளிலும் மற்றும் ஆலயங்கள் பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு [4-ம் பக்கம் பார்க்க]

## கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், நேற்று மாலை 4-45 மணியளவில் தொடர்ச்சியான 50 கலிபர் துப்பாக்கி வேட்டுக்களை, யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கித் தீர்த்தனர். (வி)

## வவுனியா பகுதியில் 3 படையினர் பலி

(கொழும்பு)
வவுனியா நகருக்கு தென் மேற்கே ஆறு மைல் தூரத்திலுள்ள இராஜேந்திரக்குளத்தில விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது திடீர் தாக்குதல்கள் நடத்தியதில் மூன்று இராணுவத்தினர் [4ம் பக்கம் பார்க்க]

## யாழ். நகரில் இன்று மாணவர் ஆர்ப்பாட்டபேரணி

(யாழ்ப்பாணம்)
பல்கலைக்கழக அனுமதியில் அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய திட்டத்தைக் கண்டித்து இன்று யாழ். நகரில் மாணவர்களின் மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி நடைபெறவுள்ளது.
மேற்படி பேரணியில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர் [4-ம் பக்கம் பார்க்க]

## பீரங்கிப் படகுகள் தொடர் தாக்குதல்

(கொழும்பு)
வெற்றிலைக்கேணிக் கடற்பகுதியில், வீரயா, வத்தக், பந்துல ஆகிய கடற்படையின [4-ம் பக்கம் பார்க்க]

## 5 படையினர் காயம்

[கொழும்பு]
வெற்றிலைக்கேணி பகுதியில் நேற்று நடைபெற்ற மோதல்களில் ஐந்து படையினர் பலத்த காயமடைந்தாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

## ஒபரேஷன் பலவேகய - 2: 'புலிகளுக்கு எதிரான தாக்குதல் ஆரம்பமாம்!

(கொழும்பு)
வடபகுதியில் புலிகளுக்கு எதிராக ஒப்பரேசன் பலவேகய என்ற இராணுவ நடவடிக்கையை நேற்றுக் காலை 7-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.
வெற்றிலைக்கேணிப் பகுதியில் 4 படைப் பிரிவுகள் இருமுனைகளில் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
வடகிழக்குக் கரையோரப் [4-ம் பக்கம் பார்க்க]

## தெரிவுக் குழு கூட்டம்

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழு, இன்று திங்கட்கிழமை மீண்டும் கூடிச் சில தீர்மானங்கள் தொடர்பாக ஆராயவுள்ளது.
இன்று கூடும் இக்குழு, எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து கூடும்என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## யுத்தத்தைமுடிக்கும்நோக்கம் பிரேமதாசா அரசுக்கு இல்லை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கம், பிரேமதாஸா அரசிடம் இல்லையென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.
ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த காலங்களில தேசியப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனளிக்காமல் போய் விட்டது.
பயனற்றுப்போன முயற்சிகளினாலும் தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகளினாலும் நாடு இன்று குழம்பிப்போய் இருக்கிறது,
இலங்கை அரங்கிலும் பல்வேறு முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. இதன் காரணமாக நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதே இன்று மக்கள் மத்தியில் தோன்றியுள்ள ஒரே கேள்வியாகும் என்றும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ரி)

## சுதந்திரக் கட்சிக்குள் இழுபறி நிலை

(கொழும்பு)
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தொடர்ந்து இழுபறி நிலையேற்பட்டு வருவதாக தெரிவிக்கபபடுகிறது.
எதிர்வரும் ஆகஸ்ட் 2ம் திகதி நடைபெறவுள்ள இக் கட்சியின் மத்திய குழு தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும் அவரது மகன் அனுராவின் ஆதரவாளர்களுக்குமிடையில் பெரும் பலப்பரீட்சை இடம்பெறலாம் (4ம் பக்கம பார்கக]

# வரி விளம்பரம்

### வைத்திய சேவை

தலைமயிர் வளர, நரை மாறுவதற்கும், வெண்குஷ்டம், தேமல், முகப்பருக்கள், பாலுண்ணி, சதைவளர்ச்சி, கழலைக்கட்டிகள், மாதவிலக்குக் கோளாறு. நரம்புத் தளர்ச்சி, செய்வினை,சூனியம், பிணிதோஷம் போன்ற சகல வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம். வேளாங்கண்ணி வைத்தியசாலை, டாக்டர் எம். கருணாதரன், 616, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்,யாழ்ப்பாணம். (சி-6469)

### தேவை

இளைஞர்கள், மாணவர்களின் பொது அறிவை வளர்க்கவும் அவர்களது எழுத்தாற்றலை வளர்க்கவும் 'அறிவுக் களஞ்சியம்-1'' யூலை முதல் நாளில் வெளிவருகிறது. இளைஞர்களுக்கான நான்கு போட்டிகளும் உள்ளன. விற்பனையாளர்கள் தேவை. பாடசாலைகளிலும் விற்பனை செய்ய ஆர்வமுள்ளவர்கள் அதிபரின் அறிமுகக் கடிதத்துடன் வந்தால் பிரதிகள் தரப்படும். விற்பனைக் கழிவுண்டு. அறிவுக் களஞ்சியம் (ஆனந்தா அச்சகம்) 226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம். (சி-6472]

### ''சுவையகம்''

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி! உங்களுக்குத் தேவையான உடனடி பேக்கரித் தயாரிப்புகள் சிற்றுண்டி வகைகள், இனிப்பு, ரொபி, சொக்கிளேற் வகைகள், குளிர்பானம் தயாரிக்கும் பொருட்கள். கேக் தயாரிக்கும் பொருட்கள். தினம் தினம் மாறுபடும் குளிர்பானங்கள் வீடுகளில் நடைபெறும் விழாக்களுக்கான சிற்றுண்டிகள், கேக் வகைகள் என்பவற்றை உடனடியாகவும், ஓடர் மூலமும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் 'சுவையகம்'' பிரதான வீதி, (யூனியன் பெற்றோல் நிலையத்திற்கு அருகாமை) சாவகச்சேரி. [ஏ-2013]

### நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம். எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6448)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், சோபிதா' 363, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம் (ஏ-2207)

### டில்கா வாச் வேக்ஸ்

பாவித்த நல்ல நிலையிலுள்ள கடிகாரங்கள் வாங்கப்படும். விற்கப்படும். பழுதடைந்த மணிக்கூடுகளும், உதிரிப் பாகங்களுக்காக வாங்கப்படும். சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். Dilka Watch Works. 404/1 ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலைய முன் மேல்மாடி) யாழ்ப்பாணம். [சி-6473]

### இன்று

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை சிறீ மூத்தநயினார் ஆலய ரதோற்சவம் இன்று 29-ம் திகதி காலை 10-30 மணிக்கு நடைபெறவுள்ளது. [71]

---

ஓம்

சாவகச்சேரி டச் வீதி

அருள்மிகு

## ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய
## அலங்கார உற்சவம்

பழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் மேற்படி ஆலய முன்றலில் 30-06-92 செவ்வாய் முதல் 16-07-92 வியாழன் வரை பிரதிதினமும் மு. ப. 10:00 மணிமுதல் விசேட அபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### ஸ்ரீ பழனி வேல் பவனி

15-07-92 புதன் பகல் அபிஷேகம், உற்சவம் என்பன நடைபெற்று பி. ப. 2.30 மணியளவில் ஸ்ரீ முருகப் பெருமானின் வேல், பவனி, நகர்வலம் வருவார்.

### சங்காபிஷேகம் அன்னதானம்

16-07-92 வியாழன் பகல் 108 சங்காபிஷேகம், விசேட பூஜை விழா நிறைவு, அன்னதானம், தேவாரப் போட்டி என்பன நடைபெறும்.

### கந்தபுராணம்

தினமும் ஆத்மஜோதி உயர்திரு. நா. முத்தையா அவர்களின் கந்தபுராணம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழும்.

இதனைத் தொடர்ந்து தினமும் எம்பெருமானின் வேல், விசேட சாத்துப்படியுடன் வீதி உலா வரும் வேளையில் அடியார்கள் அனைவரையும் இவ்வலங்கார உற்சவத்தில் பங்குகொண்டு எம்பெருமானின் திருவருட் கடாட்சத்தைப் பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

மேற்படி ஆலய பரிபாலன சபை

டச்சு ரோட்,
சாவகச்சேரி. (சி 6470)

---

## யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்
## கிளிநொச்சி விவசாயபீடம்
## கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகம் தனது கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் (இராமநாதன் விவசாயப்பண்ணை) உற்பத்தி செய்த பாவனைக்குரியதும், விதைப்பதற்குரியதுமான நெல்லை விற்பனை செய்வதற்காகக் கேள்விப்பத்திரங்களைக் கோருகிறது.

1. விதை நெல் – இனம் H 4, BG 350 [சிவப்பு] BG 400 -1 (வெள்ளை
2. பாவனைக்குரிய நெல் – இனம் BG 400–1 (வெள்ளை)

கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்போர், பின்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

1. தேவைப்படும் இனம்
2. தேவைப்படும் அளவு
3. புசல் ஒன்றிற்குச் செலுத்த விரும்பும் விலை
4. விதைநெல்/பாவனைக்குரிய நெல்

விற்பனை விலை, விற்பனை செய்யக்கூடிய அளவு ஆகியன கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்களின் அடிப்படையில் யாழ் பல்கலைக்கழக கேள்விச் சபையினால் தீர்மானிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியினையோ ஏற்கும் நிராகரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரியது.

யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

கேள்விப்பத்திரங்கள் 1992–07–17ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதியாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திர தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நெல் விற்பனைக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1992 - 07 – 17ம் திகதி பி. ப. 2. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

பதிவாளர்

[ஏ–2255]

---

## மரம் நடுவோம்!

### யாழ். குடாநாட்டில்

★ விறகுக்காக பெருமளவு மரங்கள் வெட்டப்படுகின்றன.
★ இதனால், யாழ். குடாநாட்டின் சூழல் பாதிக்கப்படுகிறது.
★ இது எமது மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்பாகும்.
★ ஆகவே, நாம் ஆளுக்கொரு மரம்வைத்து பாதுகாக்க. திடசங்கற்பம் கொள்வோம்.

### மர நடுகையை ஊக்குவிக்குமுகமாக

★ மரக்கன்றுகளை வைத்துப் பராமரிக்க பொலித்தீன் பக்கட்டுக்கள் தேவைப்படுகின்றது.

வீடுகளில் பொது இடங்களில் பயன்படுத்தும் பால்மா பக்கட்டுகளை எங்களிடம் ஒப்படைத்து, பக்கட்டுக்கு ரூபா ஒன்றை (1/–) எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.


## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T. R. O)

காரியாலயங்கள்:
அளவெட்டி, கொக்குவில்,
பருத்தித்துறை, நாகர்கோவில்,
சாவகச்சேரி, பளை, நெற்பேலி.

(சி–6471)

---

## 5ம் ஆண்டு நினைவுதுளிர்



### சுப்பையா சத்தியானந்தம்
### (அப்புச்சி)

தாயின் மடியில்: 18 - 06 - 1963
இறைவன் அடியில்: 24 - 06 – 1987

திதி: 29 - 06 – 1992

அன்பின் செல்வமே அப்புச்சி!
நீ மறைந்து ஐந்து ஆண்டுகள்
சென்றாலும் எம் இதயங்களில்
என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கிறாய்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

பிரார்த்திப்பவர்கள்

அம்மா, அண்ணன்மார், அண்ணிமார்,
பெருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்

சீனிவாசன் வீதி,
சுன்னாகம்.

[சி–6466]

# கடற்படைப் பாதுகாப்பில் விஜயவீராவின் மனைவி, பிள்ளைகள்

[கொழும்பு]

ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீராவின் மனைவியும், பிள்ளைகளும் திருகோணமலை கடற்படைத் தளத்திலுள்ள கடற்படையினரின் பாதுகாப்பில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் உத்தரவின் பேரிலே விஜயவீராவின் குடும்பம் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

திருமதி விஜயவீரா முன்னர் பாதுகாப்பு கோரியதையடுத்து கனேமுல்லயிலுள்ள இராணுவ அதிரடிப்படைத் தளத்தில் வைக்கப்பட்டிருந்தார்.

விமானப்படைத் தளத்திலுள்ள திஸ்ஸ வித்தியாலயத்தில் விஜயவீராவின் பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# போதைவஸ்து கடத்தல் குழு இத்தாலியில் கைது

[ரோம்]

இலங்கை போதைவஸ்து கடத்தல் குழுவினர் இத்தாலியின் தலைநகரான ரோமில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் மூன்று தமிழ் இளைஞர்கள், நான்கு சிங்களப் பெண்கள், ஒரு லிபியா நாட்டவர் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

ஆறு வருடங்களாக இயங்கிவந்த இந்த போதைவஸ்து குழு நான்கு நாடுகளின் கூட்டுமுயற்சியில் கடந்த மாத ஆரம்பத்தில் ரோம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## இனந்தெரியாத நபரால் இந்திய இணை அமைச்சர் தாக்கப்பட்டார்

[புதுடில்லி]

இந்திய மனிதவலு மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் செல்வி பம்தா பானர்ஜி இனம்தெரியாத நபரொருவரால் கல்கத்தாவிலுள்ள அவரது இல்லத்தில் வைத்துப் படுமோசமாகத் தாக்கப்பட்டார்.

அமைச்சரைச் சந்திக்க வேண்டுமென கூறிக்கொண்டு அவரது அறைக்குள் நுழைந்த குறிப்பிட்ட நபர் பெல்ட் ஒன்றினால் அமைச்சரைத் தாறுமாறாகத் தாக்கினாராம்.

இதனால் அமைச்சரின் நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டு உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சம்பந்தப்பட்ட ஆசாமி கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார். இச்சம்பவம்தொடர்பாக பூரணவிசாரணை நடாத்துமாறு கல்கத்தா பொலிசாருக்கு மேற்குவங்க அரசு உத்தரவிட்டது. (க)

# சமர்ப்பணப் பாடலைக் கேட்டு மயங்கி விழுந்த பெண்கள்

(கொழும்பு)

கடந்த 23-ம் திகதி அன்னையர் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட, காணாமற்போனோர் பற்றிய கூட்டத்தில் ஜே.வி.பி, கிளர்ச்சியின்போது உயிரிழந்தோருக்குச் சமர்ப்பணமாக எழுதப்பட்ட பாடலொன்றை இசைக் கலைஞர் நந்தா மாலினி பாடியபோது ஆயிரக்கணக்கான பெண்கள் விம்மி விம்மி அழுதார்கள். சிலர் மயக்கம் போட்டு விழுந்தார்கள்.

அக்கூட்டத்தில் கொலையுண்ட பத்திரிகையாளர் றிச்சட் டி சொய்ஸாவின் தாயார் மனோராணி சரவணமுத்து பேசும்போது:- இந்த நாட்டின் சட்டங்களை மீறியும், ஆண்டவன் விதித்த சட்டங்களை மீறியும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நாங்கள் நியாயம் கேட்கிறோம் என்று குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதாகக் கூறித் தமது புதல்வர்கள், தமது கணவர், தமது நண்பர்கள் ஆகியோரும் கூடவே கொல்லப்பட்டதாக, அல்லது முற்றாக மறைத்துவிட்டதாக. காணமல் போய்விட்டதாக அழுது அழுது முறையிட்டதாக பி.பி.ஸி. முகவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் 60 ஆயிரம் பேர் இறந்தும், காணமலும் போய்விட்டதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. மகிந்தா ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

# இராசி பலன்

**29-06-1992**

**திங்கட்கிழமை**

**(தமிழுக்கு ஆனி 15)**

சதுர்த்தசி மு. இ. 8.27 வரை: மிருகசீரிடம், பி.ப.4.09 வரை போதாயன அமாவாசை இராகுகாலம் 7.29 முதல் 8.56 வரை சுபநேரம் காலை 11 56 முதல் 1 26 வரை அமிர்தசித்தம்

மேடம்: தாயார் நினைவு, விருந்துண்ணல், அதிக பிரசங்கம்.

இடபம்: தொழில் சிரமம், குடும்ப வேற்றுமை, யோசனை

மிதுனம்: பந்து வருகை, தொழில் முதலீடு, காரியசித்தி

கடகம்: பிறர் தொல்லை, தொழில் சிந்தை, மறதி.

சிங்கம்: அதிக சுகம், வித்தை விருத்தி, கடிதஉறவு.

கன்னி: தெய்வபக்தி, புதிய உறவு, குடும்பசுகம்.

துலாம்: நண்பர் விரோதம், மனசங்கடம், செலவு

விருச்சிகம்: காரியஅலைச்சல் மனப்பயம், சோம்பல்

தனுசு: தொழில் உற்சாகம் தானதர்மம், பொதுப்பணி.

மகரம்: அதிகாரிகள் பாராட்டு, விந்தை விருத்தி, பணவரவு.

கும்பம்: தடுமாற்றம், அகாலபோஜனம், மனக்கவலை

மீனம்: காரியதாமதம், பயனற்றசெயல், வாக்குப் பகை.

ஜோஸ்யர்

## வடமராட்சிக்கு 12 ஆசிரியர்கள்

[புலோலி]

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட 50 ஆசிரியர்களில் 12 பேர் வடமராட்சி கல்விக் கோட்டப் பிரிவுப் பாடசாலைகளில் நியமனம் பெற்றுள்ளனர். (61)

## சம்பள முற்பணம்

(புலோலி)

அரசாங்க ஊழியர்களுக்கு 6 மாத, 2 வருட சம்பள முற்பணம் கடனாக வழங்கும் திட்டத்தின்கீழ் மந்திகை அரசினர் வைத்தியசாலை ஊழியர்களுக்கு ஆறு மாத சம்பள முற்பணம் கடனாக வழங்கப்பட்டுள்ளது [61]

# 90வயதுதம்பதிக்கு பதிவுத் திருமணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவேகானந்த நகரில் 90 வயது வயோதிப தம்பதி கடந்த வாரம் பதிவுத் திருமணம் செய்து புதுமையை நிலைநாட்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பெருப்பகுதி பதிவாளரும் காணிப் பதிவாளருமாகிய திரு. கே. சதாசிவஐயர் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தகவல் தருகையில்,

கிளிநொசி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த பதிவாளர் அலுவலகம் இதுவரை 510 திருமணங்கள் நிறைவேற்றி வைத்துள்ளதாகவும் இத்திட்டம் பூநகரி, பளை கண்டாவளைப் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

விவேகானந்த நகரில் முனியாண்டி மாணிக்கம், வெங்கிட்டன் பட்டம்மா ஆகிய 90 வயது தம்பதிகளே பதிவுத் திருமணம் செய்துகொண்டார்கள் என்றும் மேலும் அவர் தெரிவித்தார். [83]

# கட்டுத் துவக்கு வெடித்து பாடசாலை மாணவன் பலி

(கிளிநொச்சி)

காட்டில் வேட்டையாடப் பயன்படும் சட்டுத்துவக்கு எதிர்பாராமல் வெடித்ததால் 16 வயதுப் பாடசாலை மாணவன் ஒருவர் பலியானார்.

புதுக்காடு- இராமநாதபுரம் கிளிநொச்சி வாசியாகிய இராசையா கோணேஸ்வரன் என்பவரே பரிதாபமாக மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது. பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சத்தியசீலன் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி கிராமசேவையாளர் திரு. செல்வரத்தினம் ஆஜர் செய்தார். (83)

## மண்ணெண்ணை விநியோகம்

(அரியாலை)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் உலர் உணவு அட்டை ஒன்றுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணை ஒரு லீற்றர் 23 ரூபாவாக விற்கப்பட்டது. 59

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப்பகுதியிலுள்ள ப.நோ.கூ. சங்கக் கடையில் உலர் உணவு அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணை மக்களுக்கு வழங்கப்பட்டது (56)

## அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை செவ்வாய் தொடக்கம் அடுத்தமாதம் 16-ம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறும்.

உற்சவ நாட்களில் ஆத்மஜோதி நா. முத்தையாவினால் கந்தபுராணம் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். [க

## செக். அரசு இராஜினாமா

[லண்டன்]

செக்கோஸ்லேவிய பெரடல் அரசாங்கம் இராஜினாமா செய்துவிட்டது.

புதிய நிர்வாகம் அமைக்கப்படும்வரையில் தொடர்ந்து பதவியில் இருக்குமாறு அந்நாட்டு அதிபர் வாக்கினஸ் கார்மல் தனது அமைச்சரவையை பணித்துள்ளாராம்.

இதேவேளையில் கடந்த வாரம் செக். மற்றும் ஸ்லோவியா நாடுகள் இரண்டாக பிரியும் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டதும் தெரிந்ததே. (க)


## பொருட்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது

கலாலயாவின் மனைப்பொருளியலும், கைத்திறனும் பொருட்காட்சி 30-06-92 [செவ்வாய்க்கிழமை] மாலை 6.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இடம்: கலாலயா, விக்டோரியாவீதி, யாழ்ப்பாணம்
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

- இயக்குனர்

[எ 2261]



# நவாலி நல்லூரிலே கோயில்கொண்டுள்ள கோவே!

''மீன்பிடிக்கின்றவா. பேதுரு! இன்று உனை
நான்பிடிக்கின்றனன் வா!
மேவும் உன் உடைமைகள்
யாவுமே விட்டு, இனி
-மேல் எனைப் பின்தொடருவாய்!

வான் பிடித்திட்டவன் யேசுவாம் தம்பியின்
வாய்மொழி இதை நம்பியே
வலையுடன் படகையும்
வறிதென்று விட்டு, அவர்
வழியிலே சென்ற துய்யா!

ஊன்பிடித் திட்டதோர் தளர்வினால், மும்முறை
உம்குருவை மறுதலித்தும்
உத்தம, மனத்தாபப் பட்டுருகி, நல்அருள்
ஒளிபெற்று வழிபற்றினாய்!

கடன்பிடித் திட்டமெய் உணர்வினால் நாம்செயும்
குறைதமைப் பொறுத்தருளவே
கூப்பினோம் கைகளை. நவாலி நல்லூரிலே
கோயில்கொண்டுள்ள கோவே!

— அல்லைநல்லூர் அந்தோனிப் பண்டிதர்

(இன்று நவாலியில் இடம்பெறும் சம்பேதுரு பாவிலு திருநாள் வாழ்த்துக் கூறுவோர்:)

'சமுத்திரா றேடர்ஸ்'
கடற்றொழில் உபகரண விற்பனையாளர்.
நவீன சந்தைக் கட்டடம், யாழ்ப்பாணம்.

நோர்லீ என்ரபிறைசஸ், நவாலி தெற்கு, மானிப்பாய்.

மெடிக்கல் சென்ரர், நவாலி தெற்கு, மானிப்பாய்.

நியூவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்.

நாவாந்துறையூர் அன்பர் செல்வம் விற்றுலிஸ். (சி-6474)

# குடாநாட்டைத் துண்டிப்பதே படையினரின் நோக்கம்!

## — பி. பி. சி. கணிப்பு

[லண்டன்]
தற்போது சிறிலங்கா இராணுவம் இலங்கையின் வட பகுதியில் எடுத்துள்ள நடவடிக்கை புதிய குறிக்கோளைக் கொண்டுள்ளதாக காணப்படுகிறது என பி. பி. சி. தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாகவே யாழ்ப்பாண பகுதியில் மேலும் கூடுதலான நிலப் பகுதிகளை பிடிக்க இலங்கை இராணுவம் வரையறைக்குட்பட்ட பல சிறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளதெனவும்தெரிவிக்கப்பட்டது.

பெருமளவிற்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ். குடாப்பகுதியை நாட்டின் பெரும் நிலப்பரப்பிலிருந்து முற்றிலும் துண்டித்து விடுவதே அரசுப் படைகளின் இப்போதைய நடவடிக்கையின் குறிக்கோள் என்றும் பி.பி.சி. தெரிவித்தது, [கே]

### பச்சிலைப்பள்ளி
[1ம் பக்கத் தொடர்ச்சி]
கள் கூட்டமாகக் கூடிநின்ற இடங்களை நோக்கியே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பளைப் பகுதியில் நடந்த குண்டு வீச்சினல் பச்சிலைப் பள்ளி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் சேதம் அடைந்தது. அச்சங்கத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றும் மற்றும் நான்கு வீடுகளும் சேதம் அடைந்தன.

இக்குண்டு வீச்சினல் வீதியில் சென்றுகொண்டிருந்த இருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதியான வெற்றிலைக்கேணிப் பகுதியிலும் விமானத் தாக்குதல் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து கட்டைக்காடு ஆனையிறவு முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளையில் பளைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் கெயர் விவசாயத் திட்ட அலுவலகமும் களஞ்சியமும் முற்ருகச் சேதமாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [156-56]

## மூன்றுவதாண்டு வீர அஞ்சலி



### வீரவேங்கை·மேஜர் றஞ்சன்
### இராசதுரை- சுரேஷ் [கண்ணன்]

வீரஜனனம்: 1968-02-27 வீரமரணம்: 1989-06-29

உயிர் தமிழுக்கு உடல் தமிழ் ஈழத்துக்கு-என்று
வீரமுழக்கமிட்டு விறல் வேங்கையாய் எழுந்து
செந்தமிழ் மண்ணை மீட்கும் செருக்களத்தில்
சென்னீரையே பன்னீராகச் சிந்தி
ஈழத்தமிழ் மாதாவுக்கு உன்னையே தியாகம் செய்த
மேஜர் றஞ்சனே நீ தமிழ் ஈழத்துக்கு உரமாகி
மூன்ருண்டுகள் முடிந்துவிட்டன- உன் உரத்தில்
வேங்கைகள் முப்பது மடங்காகி வளர்ந்துவிட்டார்கள்
உன் எண்ணம் ஈடேறும்
தமிழ் ஈழம் மலரும்
நீ வீர சொர்க்கத்தில் இருந்து
வெற்றிப் பெருமிதம் அடைவாய்.

உன் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அக்காமார், அண்ணன்மார்,
சிறிய தாய்மார், மாமா, மாமிமார்,
நண்பர்கள்.

டச்சு றேட்,
சித்தன்கேணி. (சி-6460)

### வவுனியா பகுதியில்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கொல்லப்பட்டுனர். இச்சம்பவத்தில் மேலும் இரண்டு இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [மா]

### இது இறுதிப்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]
தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: வடமராட்சி கரையோர பகுதி முதல் தீவுப்பகுதிவரை இத்தாக்குதல் நடவடிக்கை இடம்பெறும் என்ருர்.

இத்தாக்குதல்களுக்கென கடற்படை கப்பல்கள், விமானப்படை விமானங்கள் உட்படப் போதியளவு படையினரும் இப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர். [சி]

### ஒபரேஷன்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பகுதியாக ஒரு பிரிவினரும், தென்மேற்கு கிளிநொச்சியை நோக்கி மற்ருெரு தொகுதியினரும் தாக்குதலை ஆரம்பித்ததாகமேலும் கூறப்படுகிறது.

இப்படைப் பிரிவுகளுக்கு விமானப் படையினரும் கடற்படையினரும் உதவியாக பாதுகாப்பு வழங்கி வருகின்னர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### சுதந்திரக்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித் தலைவராக திருமதி சிறிமாவோ போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டாலும் ஏனைய பதவிகளுக்கு கடும் போட்டி நிலவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுரா கட்சியின் காரியதரிசிப் பதவிக்கு மகிந்தராஜ பக்ஷாவையும் சிறிமா தர்ம சிறி சேனநாயக்காவையும் ஆதரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### வெற்றிலைக்கேணியில்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]
களுடனும், ஆயுதங்களுடனும் முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு படையினரை முன்னேறவிடாது தடுத்ததாகவும் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாமெனவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

ஹெலிகொப்டர்கள் நான்கு, குண்டுவீச்சு விமானங்கள் நான்கு, அவ்ரோ விமானங்கள் இரண்டு மற்றும் சுப்பர் சோனிக் விமானங்கள் இரண்டு ஆகியன படையினருக்கு பாதுகாப்பு வழங்கும் விதமாக குண்டு வீச்சு தாக்குதல்களைமேற்கொண்டன.(56]

### அரசு அறிவிப்பு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அரசு அறிவிப்பு விட்டிருப்பதனை கொழும்பிலுள்ள தமிழ் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இராணுவம் விமானப்படை மூலம் மக்கள் அகதிகளாக தங்கியிருக்கும் இந்துக் கோவில்கள் மீது குண்டுவீசி தாக்கியுள்ளது என்றும் இதே போன்று கடந்தமாத இறுதியில் இந்துக்கோவில் ஒன்றில் மக்கள் தஞ்சமடைந்தபோது விமானப் படையினர் தாக்கியதில் பலர் உயிர் இழந்துள்ளனர் என்றும் இக்கட்சிகள் புகார் தெரிவித்துள்ளன. [கே]

### விறகுடன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி]
யானர்.

இவரது சடலம் நேற்றிரவு யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இவர் அப்பகுதியில் விறகுடன் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் போது குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் அதற்கு அவர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அப்பகுதியில் வந்த பல வாகனங்களை நோக்கியும் விமானங்கள் வட்டமிட்டு குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56]

### வவுனியா
(1-ம் பக்கத்தொடர்ச்சி)
முற்ருக அழிக்கப்பட்டன.

சுமார் 30 நிமிடங்கள் வரை நடைபெற்ற இந்த துணிகரத்தாக்குதலின் பின்பு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

ஜி.3 ஏ-3 ரகத்துப்பாக்கி-1, ரி 56 புதிய ரகத்துப்பாக்கிகள்-2, ரி 56 இரண்டு ரகத் துப்பாக்கி-1, 303 ரக இலகுஇயந்திரத் துப்பாக்கிக்குரிய மேலதிக சுடுகுழல்-1, இதற்குரிய ரவைக்கூடு-1, ஏ. கே. 47 ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள்-8. ஜி-3 ரகத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள்-4, 303 ரகத் துப்பாக்கிக்குரிய ரவைகள்-1700, நேட்டோ ரவைகள்-177, நடுத்தர ரவைகள்-562, ஜே. ஆர். கைக்குண்டுகள்-2, ரவைக்கூடுகள் தாங்கிகள்-5, கவசத்தொப்பிகள்-8, இராணுவப்பட்டிகள்-2, மழைக்கவசம்-1.

இந்தத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் 4 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

2-ம் லெப். புகழேந்தி (நாகராசா மோகனராசா-பாவற்குளம் 4-ம் யுனிட்], லெப். ரகு (பெரியதம்பி குகதாஸ்-கனகராயன்குளம்], லெப். இளம்பரசன் அல்லது றம்போ (பரமானந்தன் தயாளன்-வட்டக்கச்சி), வீரவேங்கை மகேந்திரன் (பூலோகசிங்கம் பத்மலோயன்-சேமமடு) ஆகியோர் வீரச்சாவைத்தழுவிக் கொண்டனர். இந்த வீரவேங்கைகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (வ)

### பீரங்கி படகு
(1ம் பக்கத் தொடர்ச்சி)
ரின் பீரங்கிப் படகுகள் எந்த நேரமும் இப்பகுதியில் பீரங்கித் தாக்குதல்கள் நடத்திய வண்ணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. (மா)

### யாழ். நகரில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கள், கல்விமான்கள் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து இன்று காலை ஆரம்பமாகும் இந்தப் பேரணி, யாழ்.செயலகத்தை அடைந்து யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்கும்.

இதேவேளையில் இப்பேரணியில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும் கலந்து கொள்ளும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் பல்கலைக்கழக மாணவர் சங்கமும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (வி-சு-56]

## நினைவஞ்சலிக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]
இம்மாதம் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை ஸ்ரீபனின் நினைவஞ்சலிக்கூட்டம் இன்று மாலை 7-30 மணியளவில் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் நடைபெறவிருக்கிறது.

### புலிகளின்
[1-ம்பக்கத் தொடர்ச்சி]
களால் புதைத்துவைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் மிதிவெடிகள் படையினர் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் போன்றவற்றை கண்டுபிடிக்கும் சாதனங்கள் படையினரிடம் இருந்தபோதும் படை நடவடிக்கைகளின் போது இச்சாதனங்கள் பயன்படுத்தக்கூடிய நிலை இருக்குமா என்று கூறமுடியாதுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேவேளை யாழ். குடாக் கடலில் கடற்படைப் பீரங்கிப்படகுகள் ரோந்துப்பணிகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் கரையிலிருந்து பல மைல்களுக்கப்பாலே அவை ரோந்து செய்யமுடிகிறது. இதற்குக் காரணம் கடலில் புலிகளால் வைக்கப்பட்டுள்ள கடல் கண்ணிகளே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குடாநாட்டில் பாரிய தாக்குதலை படையினர் ஆரம்பிக்கும்பட்சத்தில் இழப்புக்களை அதிகளவில் படையினர் சந்திக்கவேண்டி வரும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது, [ரி]

## மரண அறிவித்தல்

### வெலிச்சோர் யோசேப்

மானிப்பாய் புனித அன்னுள் ஆலயத்தை சேர்ந்த திரு. வெலிச்சோர் யோசேப் 28 - 06 - 92 ல் காலமானுர். இவர் காலம் சென்ற மேரி மாக்கிறேற்றின் அன்பு கணவரும், அந்தோனிப்பிள்ளை, செங்கோல் ராஜா [சவூதி அரேபியா], பஸ்ரியாம்பிள்ளை, (உரிமையாளர் பஸ்ரியன் பேக்கரி] யேசுதாசன், இராககினியம்மா, லூசியா, ஆகியோரின் அன்புத்தந்தையும், பெர்ணதேத்தம்மா. மேரியூப்பிறேசியா, ஞானபாக்கியம், லூசியா பிறக்சீற், அலேசியஸ் ஆகியோரின் அன்புமாமனும், அருள்தாசன், செல்வமாணிக்கம் அருள்மேரி, அருள்நேசன் [சுவீஸ்) ஜெயசீலி, ஜெயமணி, அலெக்ஸ்போல் மேரி யூடிற்ரு மேரி யூக்கிறேசியா, மேரியூலியா, றெபின்சன் ஜான்சன், ஜான்மரினு, யோண்சன் [ஜேர்மனி], சியாமளா, யூர்மிளா, நெவின்சன், ஜெயசீலன், [சவூதி அரேபியா] ஜெயலுமினு, ஆகியோரின் அன்பு பேரனுமாவார், இவரின் ஆன்மசாந்திக்காக 29 - 06 - 92 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய் புனித அன்னுள் ஆலயத்தில் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். (சி-6475)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Number B/10336/81